


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரதநாட்டிய அரங்கேற்றம்

நாட்டிய கலைமணி

**திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரன்**

(நிறுவனர் - இயக்குநர் இராஜரெட்ணம் நடனாலயம், திருக்கோணமலை)

அவர்களது மாணவியும்

**திரு. திருமதி திருச்செல்வம் ஜீவசாந்தி**

அவர்களது புதல்வியுமான

## செல்வி அபிசனா திருச்செல்வம்

முதன்மை அழைப்பாளர்

**திருமதி. இலிங்கேஸ்வரி இரவிராஜன்**

முதல்வர், தி / தி / ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி

மதிப்பிற்குரிய அழைப்பாளர்கள்

**பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள்**

ஆலய ஆதீனகர்த்தா, பிரதமகுரு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில், திருக்கோணமலை

**சிவஸ்ரீ சு. சுதாகரக் குருக்கள்**

முதன்மைக்குரு, நிர்வாகஸ்தர் வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில், திருக்கோணமலை

**தவத்திரு அகத்தியர் அடிகளார்**

தென் கயிலை ஆதீனம், திருக்கோணமலை

சிறப்பு அழைப்பாளர்கள்

நாட்டிய வாரிதி, நாட்டிய வித்தகி, கலாபூசணம், வித்தகர்

**திருமதி சாரதாதேவி சிறிஸ்கந்தராசா**

இயக்குநர், திருக்கோணேஸ்வரர் நாட்டியக் கலாமன்றம்

**சைவப்புலவர் கலாபூசணம் செ. விபுணசேகரம் (JP)**

மேனாள், உதவிக் கல்வி பணிப்பாளர்

திருவள்ளுவர் ஆண்டு 2051 மடங்கல் 16ம் நாள்

செவ்வாய்க்கிழமை **(01.09.2020)** பிற்பகல் **2.00** மணிக்கு

தி / தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி அரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



எல்லாம் வல்ல அருள்மிகு மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவ பூமியாம் எமது திருக்கோணமலையிலே திருமதி. தங்கம்மா சண்முகப்பிள்ளை அவர்களால் பெண்கள் கல்விக் கூடமாக எமது பாடசாலையான தி / தி / சண்முக இந்து மகளிர் கல்லூரி உருவாக்கப்பட்டது. சிறு மரமாக இருந்த எமது பாடசாலை தற்போது பெரு விருட்சமாக வளர்ந்து பலருக்கு நிழல் தந்து கொண்டிருக்கின்றது. இப் பாடசாலையானது கல்வி கற்க வரும் மாணவிகளுக்கு கல்வியோடு சேர்ந்து ஆடல், பாடல் போன்ற கவின்கலைகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிப்பினை நல்கி வருகின்றது.



மேலும், மனிதனின் ஆன்மீக விருத்தி என்பது பாடசாலைக் கல்வியின் ஓர் அங்கம். இத்தகைய அகம் சார்ந்த வளப்படுத்தலின் ஓர் அங்கமாகிய ஆடல்கலையின் ஊடாக உள நிலை உன்னதமாக வளப்படுத்தப்படுகின்றது. ஆடற்கலையினை விரும்பிக் கற்று அரங்கேற்றம் காண்பது அருகி வருகின்ற இக்காலகட்டத்தில் இவருடைய முயற்சி ஒளி பெற்று பிரகாசிக்க வேண்டும்.

அத்துடன் இன்று பரதநாட்டிய அரங்கப்பிரவேசம் செய்யும் எமது கல்லூரி மாணவியான செல்வி. அபிசனா திருச்செல்வம் அவர்கள் சகல சிறப்புக்களும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்தி, தனது கலையை ஏனையோரும் பயன்பெறும் வண்ணம் மென்மேலும் வளர்க்க வேண்டும் என மனமார வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

**திருமதி. இலிங்கேஸ்வரி இரவிராஜன்**
B. A. Hons. Dip. in Edu, M.Ed. SLPS
முதல்வர், தி / தி / ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் ஒன்றான பரதக்கலையை இளம் நர்த்தகி செல்வி அபிசனா திருச்செல்வம் 12 ஆண்டுகளாகப் பயில்கிறார். இவர் திருக்கோணமலை சண்முக இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர உயிரியல் விஞ்ஞான பிரிவு மாணவியாவார். வட இலங்கை சங்கீதசபை நடாத்திய பரீட்சையில் தரம் 1-3 வரை முதலாம் இடத்தில் சித்தியடைந்துளார். அரச நடன விழாவில் சர்வதேச மட்டத்தில் சிறுவர் பிரிவில் முதலாம் இடம், எழுவானில் கலைவிழா 2012ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணம் முதலாம் இடம், ஜெயாஞ்சலி சர்வதேச மட்டப் பரீட்சையில் சித்தி என்று எல்லாவற்றிலும் முன்னிலை வகிக்கின்றார்.

இராஜரெட்ணம் நடனாலயத்தின் அபிநயசாதனா, தென் கயிலைவாசா, அபிநயலாவண்யா ஆகிய நிகழ்வுகளில் பங்கு பற்றியுள்ளார். இன, மத பாகுபாடின்றி இந்துசமய ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், என்பவற்றில் தனது நடனத் திறமைகளை வெளிப்படுத்தி விழாக்களை சிறப்படைய வைத்த பெருமை இம்மாணவிக்குண்டு. நடனத்துறையில் மட்டுமல்லாது கல்வியிலும் ஐந்தாம் தர புலமைப் பரீட்சை, க.பொ.த (சா/த) தேர்வில் ஒன்பது பாடங்கள் அதி சிறப்புச் சித்தி (9A)பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்.

இவருடைய நடன அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அருள் புரிவாராக என்று வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.



**பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள்**
ஆலய ஆதீனகரத்தா, பிரதமகுரு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில்,
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



"ஆடற்கலையின் தேவன் - எமை ஆளவந்த தேவன் கண் வழி அபிநயம்
காலோடு சதங்கை கலீர் கலீர் என ஒலி தரும் பரதம்"

சங்க காலத்தில் நடனக்கலை தனியாகவே வளர்ச்சிக் காணத் தொடங்கியது. மேலும் அரங்கேற்றம் என்பது முடிவல்ல அது கலை வாழ்க்கையின் ஆரம்பம். இன்று பரதநாட்டிய அரங்கப்பிரவேசம் காணும் செல்வி அபிசனா திருச்செல்வம் அவர்கள் திருக்கோணமலை இராஜரெட்ணம் நடனாலயம் நாட்டியக்கலைமணி, இசைநடன நவரத்னா திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரனிடம் 12 வருடங்களாக நடனம் பயில்கிறார்.



மேலும் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெறவும். அவர் நடனத்துறையில் சிறந்து விளங்கவும் எல்லாம் வல்ல கறுத்தப் பிள்ளையாரினதும், வில்லூன்றி சண்முகப் பெருமானினதும், ஆடல் வல்லான் நடராஜப் பெருமானினதும் பாத கமலத்தை வணங்கி அருள் கிடைக்க வேண்டும் எனவும் எனது ஆசியையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**சிவஸ்ரீ சு. சுதாகரக் குருக்கள்**
முதன்மைக்குரு, நிர்வாகஸ்தர் வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்,
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி





எங்கும் நிறை சிவப்பரம் பொருள் யாவர்க்கும் அருள வேண்டுகிறோம்.

செல்வி அபிசனா திருச்செல்வம் அவர்கள் முதன்மை ஆடல் அரங்கேறும் நாள் இது.

திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் திருக்கோணமலையில் சிறந்த நடன ஆசிரியர்களுள் சிறப்பித்துச் சொல்லப் படுபவர் இவர்.

செம்மையாய் கலையாளும் இவரது மாணவி சிறந்த கலைக் குழந்தை.

பூத்த முகம், நேர்த்தி மொழி, போற்றும் பண்பு கொண்டவள். ஆடலில் தூய்மையும் கம்பீரமும் காட்டுமாப்போல் பாவமும் அடியழகும் இளமையோடும் ஆடற்பாங்கும் போற்றுதற்குரியது. செல்வி இவள் கல்வியிலும், கலையிலும் சிறந்து விளங்குவதுடன் வாழ்விலும் உயர்ந்து மிளிர லலிதாம்பிகை உடனுறை பேரானந்த சிவனை வேண்டுகிறோம்.

**தவத்திரு அகத்தியர் அடிகளார்**
தென் கயிலை ஆதீனம், திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Blessing Message



Here is an emerging artist in the making – Miss Abishana Thiruchelvam - She has launched into the deep culture of Bharathanatyam. We are proud of you Abishana.

Right through from your Grade 5 Scholarship you have been a star pupil. In all your achievements you have been in the time light. Today we rejoice with you! You have faced several proud moments with your presentations in Music and Bharathanatyam at the Provincial, National an even International levels.

Dance is a gift to someone from above. You have made use of your given talent, nurtured it with hard work and today you have mastered it. It is a joy filled moment to everyone.



On this happy occasion deep sentiments of gratitude go to your dear parents and most importantly to your 'Guru'. May they all bless by the Lord as you will "Always reap the joy of your hard work!"

Congratulation! God bless you.

**Sr. M. Nirosha A.C**
Principal
St.Mary's College
National school
Trincomalee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் நடனக் கலையும் ஒன்றாகும். புராணவியல் ரீதியாக பரத முனிவரால் உருவாக்கப்பட்டதாலேயே இந் நாட்டியத்திற்கு பரதம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவன் நடராஜர் வடிவத்தில் இந்த நடனத்தை ஆடியபடி சித்தரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. "பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே" என்று திருப்பல்லாண்டில் சேந்தனார் குறிப்பிட்டதும் கவனிக்கத்தக்கது.இந்த நாட்டியக் கலை இந்தியாவில் மட்டுமன்றி ஈழத்திலும், ஈழத் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் காலூன்றி வளர்ச்சி பெற்று உயர்ச்சியடைந்து வருகிறது. அவ்வகையில் இலங்கையின் தலைநகர் கொழும்பில் மட்டுமன்றி, இலங்கையின் பல நகரங்களிலும் நடனப்பள்ளிகள் அமைக்கப்பட்டு நடனக்கலை பயிற்றப்பட்டு வருவதை அறியக்கூடியதாக இருக்கிறது. இவ்வகையில் திருக்கோணமலை அதற்கு விதிவிலக்கா? இல்லவேயில்லை, திருக்கோணமலை நகரிலும் பல நடனக்கலாலயங்கள் அமைக்கப்பெற்று நடனக்கலை பயிற்றப்பட்டு வருவதை அறிகிறோம்.

நாட்டியக்கலைமணி, கலைச்சுடர் விருதுகளை வரித்துக்கொண்ட திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் தமது தந்தையர் பெயராகிய இராஜரெட்ணம் நடனாலயத்தை திருஞானசம்பந்தர் வீதியில் 1991 ஆம் ஆண்டு முதல் அமைத்து நடனக்கலையை வளர்த்து வருகின்றார். சிறப்பாக, இந்த நடனாலய நிறுவனர், இயக்குநர், நர்த்தகி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களது முழுமூச்சான பயிற்றுவித்தலில் திரு. திருமதி. திருச்செல்வம் ஜீவசாந்தி அவர்களது ஏக புதல்வி செல்வி. அபிசனா திருச்செல்வம் அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழவிருக்கின்றது.

ஒருவருடைய ஆற்றல், அறிவு, கலைக்கியானங்களிற்கு பரம்பரையும் பெரிதும் தாக்கம் செலுத்தும் என்பர். செல்வி. தி.அபிசனாவின் நடனத்துறைக்கு பரம்பரையும் காரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் அவரின் பரம்பரை பற்றி சுருக்கமாக கூறிவைத்தல் சாலப்பொருந்தும் என நினைக்கின்றேன்.

திருமதி. ஜீவசாந்தி திருச்செல்வம் அவர்களுடைய தந்தையார் திரு கா. ஜீவரத்தினம் அவர்கள் ஓர் ஓய்வுநிலை அதிபராவார். இவர் கட்டைப்பறிச்சானை பிறப்பிடமாகக் கொண்டவர், இவருடைய தாயார் திருமதி.வேலாச்சிப்பிள்ளை காளியப்பு ஆவார். இவருடைய தமயனார் அமரர். வீரக்குட்டி அவர்கள் 1940-1955 வரையான காலப்பகுதியில், கட்டைப்பறிச்சானில் நாட்டுக்கூத்துக்கள், இசை நாடகங்கள் பலவற்றை மேடையேற்றி வீரக்குட்டி அண்ணாவியார் என பலராலும் புகழப்பட்டவர். இவர் மத்தளம் வாசிப்பதில் மிகவும் கைதேர்ந்தவர். இதேபோல் வீரக்குட்டி அண்ணாவியாரின் தம்பியார் நல்லதம்பி (திருமதி.வேலாச்சிப்பிள்ளையின் தம்பி) கூத்துக்களுக்கு ஆர்மோனியம் வாசிப்பவராக மிளிர்ந்தார். இவ்வாறான கலைப் பரம்பரையே அபிசனாவின் பரம்பரை. அதுமட்டுமல்ல அபிசனாவின் தாயான வைத்திய கலாநிதி ஜீவசாந்தி, பெரியம்மா ஜீவானந்தி ஆகியோர் கட்டைப்பறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும் காலங்களில், குருகேத்திரன் போர், கர்ணன் போர் போன்ற வடமோடி நாட்டுக்கூத்துக்களை பல மேடைகளிலே ஆடி பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றவர்களாவர். எனவே செல்வி. அபிசனா திருச்செல்வம் அவர்களுடைய ஆடற்கலைக்கு பரம்பரையும் வலு சேர்க்கிறது எனலாம். இவருடைய பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு எதிர்வரும் 01.09.2020 ஆந் திகதி நிகழவிருக்கிறது. அவருடைய அரங்கேற்றம் மிக நேர்த்தியாகவும், மிக திறமையாகவும் அமையப்போகிறது. இவருடைய ஆடல் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தக்கூடியதாயிருக்கும். இவர் விஞ்ஞானத்துறையில் கற்பதற்கு காலடி எடுத்து வைத்தாலும், நடனத்துறையையும் வளர்க்க வேண்டும் அதில் வளம் பெற வேண்டும் என வாழ்த்துவதுடன் இவருக்கு நல்ல வல்லமையையும், நல்லருளையும், நற்சுகபலத்தையும் வழங்கவேண்டுமென இறைவனை இறைஞ்சி நிற்கிறேன்.

**சைவப்புலவர் கலாபூசணம் செ. விபுணசேகரம் (JP)**
மேனாள், உதவிக் கல்வி பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

உலக வழக்கில் உள்ள அனைத்து மொழிகளிலும் காலத்தால் மூத்தமொழியாக வாழ்ந்து வருவது தமிழ் மொழியாகும். இப்படியான தமிழ் மொழியின் ஆரம்பகாலத்தில்,'கூத்து'என்றும் 'சதிர்'என்றும் அழைக்கப்பட்ட 'நடனம்' இருபதாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தனிக்கலை வடிவமாக உருவாக்கம் பெற்று 'பரதம்' என்ற சிறப்புபெயர் பெற்று விளங்குகின்றது. இன்று இக்கலை பாவம், ராகம், தாளம் என்ற இவை மூன்றும் ஒருங்கிணைந்து 'பரதநாட்டிய்' என்று தமிழர்களினுடைய பாரம்பரிய சிறப்புமிக்க கலையாக விளங்குகிறமது. இவ்வாறு நீண்டகால கலைப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கும் பரதநாட்டியத்தை திருச்செல்வம் ஜீவசாந்தி தம்பதிகளின் புதல்வி செல்வி. அபிசனா திருச்செல்வம் தனது சிறுவயது முதலே ஆர்வத்துடன் பயின்று வந்துள்ளார். ஒரு மாணவியிடம் காணப்படும் இயற்கையான திறமைகளுடன் அவர்களுக்கு அமையப்பெறும் ஆசிரிய ஆசிரியைகளின் ஆக்கமும் ஊக்கமும் அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கின்றது. இந்தவகையில் 'பரதநாட்டிம்' என்ற கலையில் தனக்கென ஓர் தனியான இடத்தை திருக்கோணமலை மண்ணில் தனதாக்கிக் கொண்டுள்ள 'நாட்டியக் கலைமணி' திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரனுடைய நாட்டியப் பள்ளியான 'இராஜரெட்ணம் நடனாலயம்' என்ற நடனப் பள்ளியில் சிறுவயது முதல் செல்வி அபிசனா திருச்செல்வம் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக பரதநாட்டியம் பயின்று வருகின்றார்.

இவர் தற்போது திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் சிரேஷ்ட மாணவியாக இருந்து வருவதுடன், 2013ம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரீச்சையில் சித்தி அடைந்துள்ளதுடன், 2019ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சையில் 9A என்ற அதிசிறப்புச் சித்தியைப் பெற்றுள்ளார். அத்துடன் தற்போது க.பொ.த உயர் தரத்தில் விஞ்ஞான பிரிவில் கல்வியும் பயின்று வருகின்றார். இவர் திருக்கோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் -பத்திரகாளி கோயில் - சமாதுப் பிள்ளையார் கோயில் - சிவன்கோயில் - வில்லூன்றி கந்தசாமி கோயில் - மனையாவெளி வல்லபசக்தி கோயில் - கிருஸ்ணன் கோயில் - மாரியம்மன் கோயில் ஆகிய இடங்களில் நடைபெற்ற திருவிழா நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி சிறப்பித்துள்ளார். அத்துடன் வடஇலங்கை சங்கீதசபையினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் 'பரதநாட்டியம்' போட்டியில் தரம் - 1 இல் இருந்து தரம் - 3 வரை முதலாம் இடத்தைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இன்னும் அரச நடன விழாப் போட்டியித் தொடரில் சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் சிறுவர் பிரிவில் முதலாம் இடத்தை தனதாக்கிக் கொண்டுள்ளார். கூடவே JEYANJALI International சபையால் நடாத்தப்படும் போட்டில் 2014ம் ஆண்டில் சித்தியும் அடைந்துள்ளார். அத்துடன் 2012ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற 'எழுவானில்' கலைவிழாவில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். இன்னும் 'இராஜரெட்ணம் நடனாலயம்' நடாத்திய 'அபினயசாதனா', 'தென்கயிலைவாசா', 'அபினயலாவண்யா ஆகிய நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். இவ்வாறு பரதநாட்டியத்தின் மேல் பற்றுக் கொண்ட செல்வி அபிசனா திருச்செல்வம் இன்று 01.09.2020 (செவ்வாய் கிழமை) இவ்வளவு காலமும் கற்ற பரதநாட்டியக் கல்வியின் திறமையை வெளிக்காட்டும் வண்ணம் அரங்கப் பிரவேசம் செய்கின்றார். இவருடைய கலை நிகழ்வை பாராட்டுவதுடன், இவர் தொடர்ந்து பரதநாட்டியக் கலையில் கற்றுத் தேர்ந்து நல்லதோர் வித்தகியாக வரவேண்டும் என எல்லாம் வல்ல திருக்கோணேஸ்வரப் பெருமானின் பாதங்களை வணங்கி நானும் ஆசி வழங்குகின்றேன்.

வாழ்கதமிழ் !! வாழ்கபரதக்கலை !!

*நாட்டிய வாரிதி, நாட்டிய வித்தகி, கலாபூசணம், வித்தகர்*

**திருமதி சாரதாதேவி சிறிஸ்கந்தராசா**

இயக்குநர், திருக்கோணேஸ்வரர் நாட்டியக் கலாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் ஆசிச்செய்தி



பாவ ராக தாள சங்கமத்தில் மலர்ந்த பழங்கலை ஆடாத மனங்களையும் ஆடவைக்கும் சக்தி வாய்ந்தது. அவ்வாறு சிறப்புப் பெற்ற இக்கலை மன அமைதி ஆத்ம திருப்தி ஆளுமை முழுமை இவற்றையெல்லாம் தரவல்லது. எனது கலைக்கூடமாகிய இராஜரெட்ணம் நடனாலயத்தில் 12 வருட காலமாக பரத கலையினைப் பயின்று தனக்கென ஒரு முத்திரை பதித்தவர் அபிசனா திருச்செல்வம் அவர்கள். நடனாலயத்தினால் நடாத்தப்பட்ட நடன நிகழ்வுகள் அரச நடன போட்டிகளில் பங்கேற்று 01ஆம் இடத்தினை பெற்றவர். வ.இ.ச. சபை பரீட்சையில் தரம் 03இல் முதலாம் தரத்தில் சித்தியடைந்துள்ளார். தன்னம்பிக்கை விடாமுயற்சி நிதானம் ஆகியவை இவரிடம் காணப்பட்ட சிறப்பம்சங்கள் ஆகும். அபிசனாவின் ஆர்வமும் அவரது பெற்றோரின் உறுதுணையுமே இன்று அரங்கேற்றமாக பரிணமித்துள்ளது.

எனக்கு மாணவியாக மட்டுமல்லாது எனக்கும் எனது கணவருக்கும் அன்புக்குரிய மகளாக உள்ள அபிசனாவின் அரங்கப் பிரவேசம் சிறப்பாக நடைபெற ஆடவல்லான் அருள் வேண்டி எனது தாய் தந்தையை பிரார்த்திப்பதோடு இவரின் கல்வி மேம்பாடும் கலைப்பயணமும் பல சாதனைகள் படைத்து வெற்றிபெற கோணேசர் பாதம் பணிந்து ஆசீர்வதிக்கின்றேன்.





நாட்டிய கலைமணி கலைச்சுடர்
இசை நடன நவரத்னா
**திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரன்**
(நிறுவனர் - இயக்குநர் இராஜரெட்ணம் நடனாலயம், திருக்கோணமலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிற்கு முதல் வணக்கம்



மனிதனை அறிவதற்கு ஓர் அறிகை நெறியாக பரதக்கலை விளங்குகிறது. இக் கலையை நான் எனது 5வது வயதில் இருந்தே கற்றுக்கொண்டேன். எனது குருவான நாட்டியக்கலைமணி திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரன் ஆசிரியரிடம் இக் கலையை 12 வருடமாக பயின்று கொண்டிருக்கின்றேன். அவரின் மாணவி என்று சொல்வதில் நான் பெருமை அடைகிறேன்.

இராஜரெட்ணம் நடனாலயம் 1991ல் ஆரம்பிக்கப்பட்டது. பல நடன நிகழ்ச்சிகளை தயாரித்து மாணவிகளை நெறிப்படுத்தி தேசிய மட்டத்தில் பல தங்கப் பதக்கங்ளை பெற்றுக் கொடுத்த பெருமை இவரையே சாரும்.

தன்னிடம் கல்வி பயிலும் எந்த ஒரு மாணவியையும் உயர் நிலைக்கு கொண்டுவர இரவு பகல் பாராது அயராது உழைக்கும் திறமை கொண்டவர். திருக்கோணமலையில் தனக்கென ஓர் தனி மதிப்பை பெற்றவர் ஆவார். இவர் எனக்கு குருவாக அமையப்பெற்றமை நான் செய்த பாக்கியம் என்றே கூறலாம். இவர் தன்னிடம் பயிலும் மாணவிகளை ஆடற் கலையை பயிற்றுவிப்பதில் மட்டுமன்றி சகலவிதமான ஆலோசனைகளும் வழங்கி சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் நற்பிரஜைகளாக உருவாக்குவதில் அக்கறை கொண்டவர். எனது கனவு நனவாகின்ற நாளான இன்று வரை பல சிரமங்களுக்கு மத்தியில் பயிற்றுவித்த எனது மரியாதைக்கும் பெருமைக்கும் உரிய ஆசானின் காலடியில் தாழ்பணிகின்றேன்.

**அபிசனா திருச்செல்வம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

"விதிவழி மறையவர் மிழலையுளிர் நடம்
சதிவழி வருவதோர் சதிரே
சதிவழி வருவதோர் சதிருடையீருமை
அதிகுணர் புகழ்வதும் அழகே"

கலைகள் என்பவை ஆற்றுகையாளனுக்கும், பார்வையாளனுக்கும் மகிழ்ச்சியை தரவல்லவை. அவை மனித மனத்தில் எழும் உணர்வுகளுக்கு வடிகாலாக அமைந்து மன சமநிலையை ஏற்படுத்தி, மகிழ்ச்சியை ஏற்படுத்த வல்லவை. அந்த வகையில் பரத கலை நீண்ட வரலாற்றையும் நீட்சியையும் தன்னகத்தே கொண்டமைந்தது.

புராணவியல் ரீதியாக பரத முனிவரால் உலகத்தவர்களுக்கு உவந்தளிக்கப்பட்ட பரத கலையானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. பரத கலையானது பாவம், ராகம், தாளம் என்ற மூன்றையும் இணைத்து மேன்மை மிக்க செந்நெறிகலையாக திகழ்ந்து வருகின்றது. உலகின் பல நாடுகளிலும் இன, மத, மொழி வேறுபாடற்று பரதக் கலையின் மரபு மாறாமல் ஆற்றுகை செய்யப்படுவதுடன் பெரும்பாலான இளந்தலைமுறையினர் இக் கலையை பயில்வதற்கு முன் வருவதும் இக் கலையின் வீரியத்தை எமக்கு எடுத்தியம்புகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் இக் கலையை பயிற்றுவிப்பதில் பல கலை மன்றங்களும் நடன ஆசிரியைகளும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதும், பல பெற்றோர்கள் இக் கலையை தம் பிள்ளைகளுக்கு பயிற்றுவிப்பதில் முன்னிற்பதும் நம்பிக்கை தரும் செயற்பாடுகளாகும். பரதக் கலையை பயில்வதற்கும் அதனை அரங்கேற்றம் செய்வதும் யாருக்கும் எளிதில் வாய்த்திராத சந்தர்ப்பங்கள் ஆகும்.

இந்த வகையில் செல்வி. அபிசனா திருச்செல்வம் அவர்கள் கடந்த 12 வருடங்களாக நாட்டியக்கலைமணி, நாட்டிய வித்தகி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் "இராஜரெட்னம் நடனாலயத்தில்" பரதக் கலையை அர்ப்பணிப்புடன் பயின்று வருகின்றார். சிறந்த படைத்திறனும் ஆடல்திறனும் இணைந்து குருவின் ஆசியுடனும் பல உள்நாட்டு மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்றிருப்பதுடன், மிகச் சிறந்த நடன ஆற்றுகைகளையும் அளிக்கை செய்துள்ளார்.

செல்வி. அபிசனா திருச்செல்வம் அவர்களது அரங்கேற்றம் சிறப்புற நடைபெறவும், அரங்கேற்ற விழாவின் ஞாபகார்த்தமாக வெளிவரும் விழா சிறப்பு மலரு காத்தரமாக வெளிவரவும், தான் கற்ற இப்பரதக் கலையை தன் சமூகத்திற்கும், எதிர்கால சந்ததிக்கும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புமிகு காத்திரமான பங்களிப்புகளை வழங்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வதுடன், செல்வி. அபிசனா திருச்செல்வம் அவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. நவநீதன்
மாகாண பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

"தில்லைக் கூத்தனே கைலயங்கிரி வாசனே
ஆடற்கலையின் அரசனே போற்றி"

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள்ளும் அனைவரினதும் உள்ளங்களையும் கொள்ளைக் கொண்டு, புலன்களுக்குச் சாந்தியையும்,மகிழ்ச்சியையும் கொடுக்கக் கூடியது ஸ்ரீ நடராஜப் பெருமானை முதல்வராகக் கொண்டு விளங்கும் பரதம் என்றால் மிகையாகாது. மனித உணர்ச்சிகளை வெளியிடவும், பொழுதுபோக்கு அம்சமாகவும் மட்டுமன்றி இன மத மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்ட இக்கலையானது இந்துமத பண்பாட்டுக் கலாச்சாரங்களுடன் இரண்டறக் கலந்துள்ளது.



கணினி மயமாக்கப்பட இன்றைய உலகில் நடனக் கலையைக் கற்பதன் மூலம் ஒருவரது ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான உடல் வலிமை, மன உறுதி, தேக ஆரோக்கியம், சிந்திக்கும் ஆற்றல் என்பன கிடைக்கப் பெறுகிள்றது. மேலும் இக்கலையானது இறைவனுடன் இணைந்த எழிற்கலைகளாகையால் பயில்வோர், பயிற்றுவிப்போர், பேணி வளர்ப்போர் அனைவரும் இறை அருளுக்குப் பாத்திரமானராவர்.

தர்மம், புகழ், நீண்ட ஆயுள், விரும்பிய நற்பலன்கள், அறிவு வளர்ச்சி என்பவற்றைத் தரவல்லதும், இம்மையிலும், மறுமையிலும் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியதுமான நாட்டிய வேதத்தைப் பயில்கின்ற செல்வி. அபிசனா திருச்செல்வம் அவர்கள் பலகலைகளையும் கற்று, வாழ்கையில் சிறந்து விளங்கவும், எல்லா நலன்களும் கிடைக்கவும் ஸ்ரீ சிவகாமிசுந்தர சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

இன்று அரங்கம் காணும் நர்த்தகி, கலையின் அழகினையும்,தெய்வீகத்தையும் தொடர்ந்தும் வளர்ப்பதில் முனைப்புக் கொள்ள வேண்டும் என்று வாழ்த்துவதுடன் அவருக்கு அனுசரணையாக இருந்த குருவையும், பெற்றோரையும், குடும்ப உறவுகளையும் பாராட்டுகின்றேன்.


**திருமதி. சுலோசனா ஜெயபாலன்**
மேனாள் அதிபர்
தி/ தி/ ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரி
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



இசையில் முதன்மையானது கர்நாடக இசை. நடனக் கலையில் முதன்மையானது பரதக்கலை. இக்கலையில் மட்டும்தான் ஒன்பது வகையான அபிநயங்களை உடல் அசைவு மூலம் வெளிப்படுத்தி தான் சொல்ல வந்ததை உணர்ச்சிப்பூர்வமாக சொல்வதுதான் இப்பரதக் கலையின் சிறப்பு அம்சமாகும். இதை பரதக் கலையின் மூலவரான தில்லை நடராஜ பெருமான் ருத்ரதாண்டவம் (ஆனந்தத் தாண்டவம்) ஆடியபோது அண்ட சராசரங்களிலும் அதிர்வை உண்டாக்கியது என்றும், அதில் வெளிப்படுத்திய அபிநயங்களின் விளைவாகவே அவர் எப்பொழுதும் இடது காலை தூக்கி ஆடுவது போன்ற சிலையை முன்னிறுத்தி இப்பரத நாட்டியத்தை கற்க தொடங்குகிறார்கள் என்பது மரபு. இத்தகைய சிறப்பு வாய்ந்த பரதக் கலையை தங்கள் ஆர்வம் அறிந்து, நாட்டின் இக்கட்டான சூழ்நிலையிலும், கல்வியிலும், பரத நாட்டிய கலையிலும் மிக சிறந்த மாணவியாக உருவாக்க அரும்பாடுபட்ட பெற்றோர்கள் பாராட்டுக்குரியவர்கள், அவர்களை மனதார பாராட்டுகிறேன்.



தனது மாணவியின் ஆற்றலை வளர்த்து விடுமுறை தவறாது இக்கலையை கற்றுக் கொடுத்த இராஜரெட்ணம் நடனாலய ஆசிரியை திருமதி.ரேணுகா செல்வபுத்திரன் இத்துறையில் தனக்கென தனி இடத்தை பிடித்திருப்பது பலரும் அறிந்ததே அவ் ஆசிரியைக்கு செல்வி அபிசனாவின் ஆற்றுகை பெருமிதத்தைக் கொடுக்கும் என்பது உறுதி. எனவே அவர்களின் அரங்கேற்றம் அதி சிறப்புற எல்லாம் வல்ல தில்லை நடராஜப் பெருமானை பிரார்த்தித்து ஆசி வழங்குகிறேன். மேலும் செல்வி அபிசனா திருச்செல்வம் பரத நாட்டியம் மட்டுமல்லாமல் கல்வியிலும் மிகச் சிறந்து விளங்குவது கண்டு பெருமிதம் கொள்கிறேன். செல்வி அபிசனா திருச்செல்வம் பரதத்திலும், கல்வியிலும் மேலும் புதிய உச்சத்தை எட்ட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**கோ. இரத்தினசிங்கம்**
தலைவர், ஏசியாட் காலனி வீட்டு உரிமையாளர் சங்கம்,
சென்னை, தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வாழ்த்துச்செய்தி

எம் அன்பு மகள் அபிசனா, தத்தித் தத்தி நடந்த உங்கள் பிஞ்சுப் பாதங்கள் இன்று தா தெய் போட்டு நர்த்தனங்கள் புரிய போவதைக் கேட்டு எங்கள் மனம் ஆனந்தம் அடைகின்றது.

மகிழ்ச்சியாய் பரதம் பயின்று பாங்குடன் மேடை ஏறும் அழகிய மயிலே நின் எழில் நடனம் காண ஓடோடி வர இருந்தோம். என்ன செய்வது கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றோம். நின் அழகிய நடனம் காண தூரமாயிருந்து எம் கண்கள் காணுதே இக்காட்சியை. பரதத்தில் பாதம் பதித்துவிட்ட பசுந்தளிரே நீங்கள் நர்த்தனம் புரியும் சலங்கை ஒலி இங்கு வரை கேட்குதம்மா.

நற்கலை வாழ அது நலம்பெற ஏட்டில் இடம்பெறுவார் என்றும் நலம் பெறுவீர். அரும்கலையாம் பரதத்தில் சிறந்திடுவீர். தில்லை கூத்தனின் திருவருள் உமக்கு தினமும் கிடைத்திட அவன் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

**பெரியப்பாமார், பெரியம்மாமார்,**
**அக்காமார், தங்கை**
இலண்டன் - கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# வாழ்த்துச்செய்தி

உலகில் இயற்கையாகத் தோன்றிய பொருட்களனைத்திற்கும் அழகுமுண்டு, ஆற்றலுமுண்டு. எங்கெல்லாம் அழகினையும் அறிவினையும் காண்கின்றோமோ அங்கெல்லாம் மனிதனுடைய உள்ளத் தூண்டலால் உண்டாகியது கலை. கலைகள் சங்கமமாவது கோயிலிலே. இத்தகைய புனிதக் கலைகளில் ஒன்றான நாட்டியக் கலை ஆன்மிக வளர்ச்சியுள்ள நற்பண்புகள் பொருந்திய சிறப்பாற்றலுள்ள சமூக உருவாக்கத்தில் பாரிய பங்களிப்பு நல்குகின்றது.

அரங்கேற்றம் என்பது ஒரு கலைஞன் தான் கற்ற வித்தை தொடர்பாக முக்கியமான அனைத்தையும் கற்றுவிட்டார் என்ற அடிப்படையிலேயே நிகழ்த்தப்படுகின்றது. இந்த நடனக் கலையில் தன்னை இன்று அரங்கேற்றம் செய்கின்ற எமது பேத்தி அபிசனா திருச்செல்வம் அவரை மனமார வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர் சிறுபராயம் தொட்டு கல்வியிலும் சரி, கலைகளிலும் சரி, அனைத்தையும் செவ்வனே கற்று பல சித்திகளையும் பெற்றுள்ளார். இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை தேடிக்கொடுக்க வேண்டும். செல்வியை சகலகலாவல்லியாக உருவாக்கிய ஆசானுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அரங்கேற்றம் செய்யும் இந்நாளில் இவர் எல்லா சிறப்புக்களையும் அடைய எல்லாம் வல்ல கோணேசப் பெருமானை பிரார்த்தித்துப் பரதக்கலையின் மேன்மையினை உணர்ந்து கலைவானில் பிரகாசிக்க வாழ்த்தி உளமாற ஆசீர்வதிக்கின்றோம்.

**அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிசேர் கலைஞர்கள்



நடன அமைப்பு நட்டுவாங்கம்

நாட்டியக் கலைமணி, கலைச்சுடர்

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன்



வாய்ப்பாட்டு

செல்வன் மதுசிகன்



வாய்ப்பாட்டு

செல்வன் சுரேந்திரா நரேந்திரா

M.A. in Carnatic Music

போதனாசிரியர், சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகம், கிழக்குப்பல்கலைக்கழகம்



மிருதங்கம்

சாமஸ்ரீ தேசமான்ய 'கலாசரஸ்வதி'

திருமலை சின்னராசா காண்டீபன்



வயலின்

'கலைமணி'

ஸ்ரீ. ச. திபாஹரன்



தாளதரங்கம்

விஷாரத

ஸ்ரீ ரட்னம் ரட்னதுரை



வீணை

ஸ்ரீ பகவத்சிங் நித்தியானந்தன்

நிகழ்ச்சித் தயாரிப்பாளர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (நேத்ரா TV)



புல்லாங்குழல்

செல்வி கிரிஜா

M.A. in English



நிகழ்ச்சித் தொகுப்பாளர்

திரு. ஜ. கஜமுகன்

சிரேஷ்ட ஊடகவியலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கம்

| | இராகம் | தாளம் |
|---|---|---|
| புஷ்பாஞ்சலி | கம்பீரநாட்டை | சதுஸ்ர ஏகம் |
| அலாரிப்பு | | மிஸ்ரசாபு |
| ஜதீஸ்வரம் | கல்யாணி | ஆதி |
| கௌத்துவம் | இராகமாலிகை | ஆதி |
| இசைவேளை | | |
| வர்ணம் | சிம்ஹேந்திர மத்திமம் | ஆதி |
| இசைவேளை | | |
| பதம் | இராகமாலிகை | ஆதி |
| சிறப்பு அழைப்பாளர்களுக்கான கௌரவிப்பு | | |
| கீர்த்தனம் | ரேவதி | ஆதி |
| பிரதம விருந்தினர் உரை | | |
| கலாப நடனம் | இராகமாலிகை | சதுஸ்ர ஏகம் |

பாடலாக்கம், இசையமைப்பு தவத்திரு அகத்தியர் அடிகளார்
தென் கயிலை ஆதீனம், திருக்கோணமலை

| | | |
|---|---|---|
| தில்லானா | பிருந்தாவனி | ஆதி |
| மங்களம் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



இந் நடன அரங்கேற்றம் சிறப்புற நடைபெற அருள் புரிந்த இறைவனுக்கும், எமது புதல்விக்கு நேர்த்தியாக பயிற்றுவித்த குருவிற்கும், ஆசிச்செய்தி வழங்கியோருக்கும், எமது அழைப்பினை ஏற்று இந்நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பித்த பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் வருகை தந்த கலை ஆர்வலர்கள் அனைவருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் நிகழ்ச்சி சிறப்புற நடைபெற உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி. திருச்செல்வம் குடும்பத்தினர்



# நன்றிகள்

அரங்கம் : தி / தி / உவர்மலை விவேகானந்த கல்லூரி

ஒப்பனை : திரு. ரா. சோபிதர் (Baticaloa)

உடையமைப்பு : திருமதி. நிஹாரா இரட்ணாயக்க (Colombo)

அரங்க அமைப்பு : Ratnam Decorations (Trincomalee)

புகைப்படம் : Niro Studios (Trincomalee)

ஒளிப்பதிவு : பகவத்சிங் நித்தியானந்தன் (Colombo)

ஒலி அமைப்பு : திரு.சி. சிவரூபன் (Trincomalee)

உணவு : T.S.T Caterings Services &
S.R. Caterings Services (Trincomalee)

அழைப்பிதழ் : SS Digital's (Trincomalee)

விழா மலர் : யுனி ஆர்ட்ஸ் (தனியார்) நிறுவனம் (Colombo)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195